நீக்கப்பட்டுவிட்டது. மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய இராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட அந்தப் பகுதிகளில் மட்டும் 16 ஜமாத்துகள் இருக்கின்றன. C.A.A.–வை எதிர்த்து கிட்டத்தட்ட ஒன்றரை மாதமாக நம்முடைய அன்புக்குரிய, பாசத்துக்குரிய இஸ்லாமிய சமுதாய மக்கள் சட்டம்–ஒழுங்கிற்கு எந்தப் பிரச்சினையும் இல்லாமல், இடையூறு இல்லாமல் ஜனநாயக முறையில் நடத்திய ஆர்ப்பாட்டத்தில், அவர்களுடைய கருத்துகளைத் தெரிவித்தார்கள். அதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால், 14 ஆம் தேதியன்று, அந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்ற அந்த இடத்தில் இந்தச் சம்பவம் நடைபெற்றது என்று சொன்னால், ** எனவே, அமைதியான முறையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்திலே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, அரசுக்கு ஒரு கெட்ட பெயரை ஏற்படுத்த வேண்டும், குறிப்பாக இந்த பட்ஜெட் என்பது பொது மக்களை reach ஆகியிருக்கிறது. அதேபோல, இந்த வேளாண் மண்டலம் குறித்த செய்திகளெல்லாம் reach ஆகியிருக்கின்றன. இவற்றை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லக் கூடாது என்பதற்காக அதற்கு ஒரு சதித் திட்டம் தீட்டப்பட்டு, அது அரங்கேற்றப்பட்டது. எனவே, இஸ்லாமிய மக்கள் சட்டத்தை மதிப்பவர்கள். அவர்கள் எந்தத் தவறும் செய்யாத நிலையிலே, இந்த விஷமிகள் அதற்குள்ளே புகுந்து இந்தக் கலவரத்திற்குக் காரணமாக அமைந்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. தமிமுன் அன்சாரி அவர்கள் பேசும்போது, ஆதாரமில்லாமல் சொன்ன அத்தனை குற்றச்சாட்டுகளும் நீக்கப்படுகின்றன. (குறுக்கீடு)*

(ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. அர. சக்கரபாணி, என்ன சொல்லுங்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் அதைக் கொடுத்திருக்கிறீர்கள். அது என் ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடு) நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள், அது என் ஆய்வில் இருக்கிறது. உட்காருங்கள். (குறுக்கீடு) இப்போதுதான், இன்று காலையில்தான் கொண்டுவந்து கொடுத்தீர்கள். (குறுக்கீடு)*

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2020 பிப்ரவரி 17]

திரு. தங்கம் தென்னரசு: *நான் சொல்லிவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அனுமதியில்லை. நான் அவைக்கு வந்த பிறகுதான். . . (குறுக்கீடு) இல்லை, அது வேண்டாம், நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் இருங்கள். நான் அதற்கெல்லாம் விளக்கம் வாங்க வேண்டும். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள். அதெல்லாம் விவாதமாக வரும். (குறுக்கீடு) திரு. தங்கம் தென்னரசு. . . (குறுக்கீடு) இல்லை, அது விவாதமாக வரும். நீங்கள் சொன்னால், அதற்கு சம்பந்தப்பட்டவரை விளக்கம் சொல்ல நான் அனுமதிக்க வேண்டும். அதெல்லாம் இருக்கிறது. (குறுக்கீடு) அதெல்லாம் அனுமதிக்க முடியாது. காலையில் நான்* Chamber–*க்கு வந்த பிறகுதான் ஒரு கடிதம் கொடுத்திருக்கிறீர்கள். அது என் ஆய்வில் உள்ளது. உட்காருங்கள். (குறுக்கீடு)*

(இ) திண்டுக்கல் மாவட்டத்தில் நிலவும் குடிநீர் பிரச்சினை குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. அர. சக்கரபாணி, என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. அர. சக்கரபாணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே வெள்ளிக்கிழமை அன்று திண்டுக்கல் மாவட்டத்தில் கடுமையான குடிநீர்ப் பிரச்சினை நிலவுவதாக ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறேன். அதை உடனடியாக. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் அதைக் கொடுத்திருக்கிறீர்கள். பதில் வந்தவுடன் அதுகுறித்து என்னவென்று நான் பார்க்கிறேன்.*

திரு. அர. சக்கரபாணி: *ஏனென்றால், சபை இரண்டு நாட்கள்தான் நடைபெற இருக்கின்றது. அதனால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்வது. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை. நீங்கள் அதைக் கொடுத்திருக்கிறீர்கள். திரு. சக்கரபாணி அவர்களே, நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். பதில் வந்தவுடனே நான் அதுகுறித்து முடிவெடுக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை,* point of information *எல்லாம் இல்லை. திரு. மனோ தங்கராஜ், உட்காருங்கள்.* Zero Hour *முடிந்துவிட்டது.*